# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2090/39 - 2018 සැප්තැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2018.09.28

*2090/39 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/2011*

**1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்**

72 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து பயனுறுவதாக, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு இக்கட்டளையின் மூலம் உரித்தாக்குகின்றேன்.*

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2018, செத்தெம்பர் 28.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே, மெதபத்து, கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவின் இல. 239 ஐக் கொண்டுள்ள பெலும்மஹர கிராம அலுவலர் பிரிவினுள் அமைந்துள்ளதும், உரிமமளிக்கப்பட்ட நில அளவையாளர் ஜீ. எல். பி. நாணயக்காரவினால் ஆக்கப்பட்ட 1990.08.15 ஆந் திகதிய 8996 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், வடக்கே : காணித்துண்டு 18 ஐயும் ; கிழக்கே : காணித்துண்டு 15 மற்றும் 16 ஐயும் ; தெற்கே : காணித்துண்டு 48 ஐயும் ; மேற்கே : காணித்துண்டு 7 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும், அதன் மீதுள்ள 278/17 ஆம் இலக்க வீடு, மண், மரங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து பரப்பளவில் பதினாறு தசம் ஏழு சைபர் (0ஏ. 0றூ. 16.70பே.) பேர்ச்சுக்களைக் கொண்டுள்ளதும், "கெக்குணகஹலந்த" என அழைக்கப்பட்டதும் காணித்துண்டு 17 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்.

இக்காணி, கம்பஹா காணிப்பதிவகத்தில் பக்கம் E 355/212 என்பதில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

*10-448*


1A - PG 4256 — 107 (2018/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.